தேசிய குடிநீர் கொள்கை ( 19/01/2024)

1. கொள்கையின் பெயர்: தேசிய குடிநீர் கொள்கை
2. செயல்வலுப்பெறும் திகதி: பங்குனி 2024
3. அறிமுகம்

I. பின்னணி

நீர் என்பது வாழ்க்கையாகும் குடிநீரைப் பெறுவதென்பது மனித உரிமையாகும்.

தனது நாட்டு மக்களுக்கு சுகாதாரம், இலவசக்கல்வி என்பனவற்றை பெற்றுக்கொடுப்பதில் தெற்காசியாவில் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வெற்றிகரமான அரசாங்கங்கள் மக்களின் நலன் சார்ந்த கொள்கையுருவாக்கத்தின் மூலமாக சமூக மற்றும் சுகாதார அபிவிருத்திகளில் சம தரத்திலான அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளை ஒப்பிடுகையில் இலங்கையானது உச்ச அளவிலான முன்னேற்றத்தினை அடைந்துள்ளது எனலாம். அதன் விளைவாக, நாடானது சமூக நலனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. சம தரத்திலான அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளை ஒப்பிடுகையில் இலங்கையானது மனித அபிவிருத்திச்சுட்டி , உயிர் வாழும் காலம், எழுத்தறிவு போன்றவற்றில் உயர் நிலையினை அடைந்துள்ளது.

இலங்கையின் தற்போதைய மதிப்பிடப்பட்ட சனத்தொகையாக 23 மில்லியன் காணப்படுகின்றது இதில் 23% நகர்ப்புறத்திலும், 73% கிராமப்புறத்திலும் மற்றும் 4% தோட்டப்புறத்திலும் வாழ்கின்றனர்.

பாதுகாப்பான குடிநீரரைப்பெற்றுக்கொள்ளும் விகிதமானது 2006 இல் 76% இருந்து 2022 ஆம் ஆண்டளவில் 93% ஆக அதிகரித்ததுடன் வருடாந்த மதிப்பிடப்பட்ட செலவீனமாக ரூபா 100 பில்லியன் காணப்படுகின்றது. இச்சனத்தொகையில் நகர்ப்புறத்தில் 66%, கிராமப்புறத்தில் 60%, மற்றும் தோட்டப்புறத்தில் 46% உம் ஆக பாதுகாப்பான நீரின் சேவைகளை ( உதாரணம் - குழாய் நீர் வழங்கல், பாதுகாக்கப்பட்ட கிணறுகள் மற்றும் மழைநீர் சேகரிப்புப் பொறிமுறைகள் என்பன) பெற்றுக்கொள்கின்றனர். மேலும், சேவை வழங்கப்படும் இடங்களில் மேம்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதற்கு பாரிய அளவிலான முதலீடுகள் தேவைப்படும்.

குறைந்தளவிலான நீர் சேவைகளினை பெற்றுக்கொள்ளுகின்ற நகர்ப்புற மற்றும் கிராமப்புற இடங்களுக்கு துரிதப்படுத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் சேவையானது அவசியமாகும். குறைந்தபட்ச நீர் சேவையினை பெற்றுக்கொள்ளாத கிரமப்புற மற்றும் பிற்படுத்தப்பட்ட இடங்களுக்கு விசேட கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

பொருளாதார வாய்ப்பினால் கவரப்பட்டதன் காரணமாக 57% ஆன மக்கள் நகர்ப்புறம் மற்றும் அரைநகர்ப்புறங்களில் வாழுகின்றனர். நல்லதொரு குடியேற்றத்தினை அமைத்தல் மற்றும் இதர சேவைகளான குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்றவற்றினை பெற்றுக்கொள்ளலை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் குடியகல்கின்றனர்.

குடிநீரானது தற்பொழுது மத்திய, மற்றும் உள்ளூராட்சி அமைச்சு போன்ற பல்வேறு முகவர்களினால் சமூகம் சார்ந்ததான அமைப்புக்கள் (CBOs), தனியார் நிறுவனங்கள் மற்றும் பிரதேச சபைகள் போன்றவற்றினால் வழங்கப்பட்டு வருகின்றது. பாரிய அளவிலான பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொறுப்பானது தேசிய குடிநீர் மற்றும்

வடிகாலமைப்புச்சபையினைச் சார்ந்ததாகும். போதுமான குடிநீரானது பிரதேசசபை, நகர சபை மற்றும் மாநகர சபைகளில் அதன் அதிகார எல்லைக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களில் போதுமான அளவு நீர் வழங்கலை உறுதிசெய்கின்றது.

பல்வேறு வீடுகளில் தனிப்பட்ட பொறிமுறைகளான பாதுகாக்கப்பட்ட கிணறுகள், மழைநீர் சேகரிப்புத்தாங்கிகள் அவர்களது சொந்த செலவில் அரச சார்பற்ற நிறுவனங்களினது உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு வியாபார நிறுவனங்களினாலும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரானது வழங்கப்படுகின்றது.

நாட்டின் எல்லா இடங்களிலும் நீர் வளமானது நிறைந்து காணப்படவில்லை என்பதுடன் நீர் வளமற்ற இடங்களும் காணப்படுகின்றன. தற்காலிக மற்றும் காலநிலை மாற்றங்களும் ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இயற்கை மற்றும் மனித செயற்பாட்டு விளைவுகளாலும் நீர் வழங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுகின்றன. நகரமயமாதல்,பிழையான பாவனை மற்றும் நீர் வள மாசடைவு என்பனவும் இச்சூழ்நிலைகளை மேலும் மோசமானதாக மாற்றியுள்ளது.

நீர் வழங்கலில் ஈடுபடுகின்ற முகவர்களை ஒரு ஒழுங்குமுறையினுள் கொண்டு வருவதன் மூலமாக பல நன்மைகளை ஏற்கடுத்த முடியும். பிரதம அமைச்சரினது அலுவலகத்தின் கீழ் தேசிய நீர் வளங்கள் சபை ஒன்றினை அமைப்பது தொடர்பாக அரசாங்கமானது கவனஞ்செலுத்தி வருகின்றது. அதனது பிரதான கடமைகளாக முன்னுரிமை அடிப்படையில் நீரினை முகாமை செய்தல், நீர்த் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் பொருத்தமான நீர் ஒதுக்கீடு என்பனவற்றினை மேற்கொள்ளுதல் அதில் அடங்குகின்றன.

நீர் ஆதாரங்கள் ரீதியாக அதன் தரம் சார்ந்த பிரச்சினைகளை கண்டறியும் முகமாக அரசாங்கமானது தேசிய நீர் பாதுபாப்புக் கொள்கையினை உலக சுகாதார நிறுவனத்தினது அனுசரனையுடன் அபிவிருத்தி செய்துள்ளது. உள்ளக மற்றும் பிராந்திய மட்ட பல்வேறு பொறிமுறையூடான முன்னெடுப்புக்கள் தற்பொழுது செயற்பாட்டில் உள்ளன. குறித்த விடயத்தினை உறுதிசெய்யுமுகமாக சம்மந்தப்பட்ட அமைச்சான சுகாதார அமைச்சினது அனுமதியுடன் WQSCS என்ற பொறிமுறையானது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்குனர்களால் வழங்கப்படுகின்ற நீரின் தரத்தினை உறுதி செய்வது சுகாதார அமைச்சினது என்பதுடன் அதனது வழிகாட்டுதல்களானது இலங்கை தர நிர்ணய சபையினால் (SLS 614) வழங்கப்படுகின்றது. உலக சுகாதார நிறுவனத்தினது வழிகாட்டுதல்களை பின்பற்றப்படுவதனை அவர்கள் உறுதிசெய்வார்கள். பல்வேறு விதமான உணவு வகைகளின் தரத்தினை உறுதி செய்வது சுகாதார அமைச்சினது பொறுப்பாக உள்ளதுடன் அதில் நீரும் அடங்குகின்றது. அந்த வகையில் நாட்டில் வழங்கப்படுகின்ற குடிநீரின் தரத்தினை கண்காணிப்பதற்கு அவ்வமைச்சில் குறித்த பொறிமுறையொன்று காணப்படுவதுடன் WQSCS இனையும் முகாமைத்துவம் செய்கின்றது.

நாட்டில் குடிநீரினை வழங்குவதற்கு பிரதான இரு முகவர்களாக NWSDB மற்றும் DNCWS காணப்படுகின்றன. NWSDB ஆனது பல்வேறு முகாமைத்துவ ரீதியாக வலிமை பெற்றிருப்பதுடன் அனைத்து தொழிநுட்ப ரீதியான வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. DNCWS ஆனது கிராமப்புறங்களில் காணப்படுகின்ற நீர் தேவையினை வழங்குதல் ,பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றில் CBOs களினுடாக அறிந்து அது தொடர்பான பரந்த அறிவினைக் கொண்டுள்ளது.

NWSDB மற்றும் DNCWS போன்ற நிறுவனங்களை சமூகத்திற்கு நற்சேவை செய்யுமுகமாக அதனது அமைப்பு,இயலுமை போன்றவற்றினை அபிவிருத்தி செய்தல் இன்றியமையாததாகும். இவைகளது கட்டமைப்புக்களை மேம்படுத்துதலானது கிராமப்புற மற்றும் தோட்டப்புற இடங்களிற்கு அவசியமான நீரினை வழங்குவதற்கான இயல் அளவினை அதிகரிக்கும். இவ்விரு நிறுவனங்களும் ஒரே அமைச்சின் கீழ் இருப்பதனால் இவற்றினை ஒருங்கிணைப்பது சுலபமாக இருக்கும்.

தற்பொழுது, தோட்டப்புற இடங்களுக்கான நீர் வழங்கலானது தோட்டப்புற முகாமைத்துவத்தினரினால் முன்னெடுக்கப்படுவதுடன் சிலசமயங்களில் NGOs களினாலும் முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டங்களினது ஆயத்தங்கள் மற்றும் பராமரிப்புக்கள் என்பன பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தினால் (PHDT) முன்னெடுக்கப்படுகின்றது. தற்சமயம், EWHCS , தொழிலாளர் மற்றும் முகாமைத்துவம் சேர்ந்த ஒரு நலன்புரி அமைப்பானது PHDT இனது வழிகாட்டுதலின் கீழ் இதில் ஈடுபடுவதுடன் உலக வங்கி நிதியுதவியுடன் தரமுயர்த்தப்பட்டுள்ளது. WUC என்ற ஒரு துணை அமைப்பும் இதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதுடன் கூட்டுறவுச்சங்க சட்டத்தின் கீழ் சட்ட அங்கீகாரத்தினையும் பெற்றுள்ளது.

நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற இடங்களுக்கு நீரினைக் கொண்டு செல்லுகின்ற மற்றும் நீர் கட்டண பொறிமுறையொன்றினை இயைபாக்கிக்கொண்ட மத்திய அரசாங்கத்தினது முகவரான NWSDB ஆனது அதற்குப் பொறுப்பான முகவராக காணப்படுகின்றமையானது இலங்கையில் தனித்துவமாகும். அது நிதி ரீதியாக அமைப்பாக உருவாக்கப்பட்ட நிறுவனமொன்றல்ல எனினும் அதன்கீழ் நீர் சார்ந்த அனைத்தும் கொண்டுவரப்பட்டுவிட்டன. இப்பொறிமுறையானது சமூக ,வணிக மற்றும் தொழிற்றுறை பாவனைகளுக்கு உதவுகின்றது.

செலவுகள் மற்றும் கடப்பாடுகளை பூர்த்திசெய்ய ஒரு ஒழுங்கமைப்பான நீர் கட்டண சரிசெய்தல் இல்லாததால் அது திறைசேரியிடமிருந்தும் வணிக வங்கிளிடமிருந்தும் நிதிகளைக்கெற்று இயங்கவேண்டிய அபாயமான சூழ்நிலை உருவானது. நீர் கட்டண சரிசெய்தலானது அரசியற் தீர்மானங்களுடன் தொடர்புபட்டதுடன் அரசியற் தீர்மானங்கள் எப்பொழுதும் தாமதமாவே மேற்கொள்ளப்படுகின்றன. அதனாலேயே கடந்த காலங்களில் நீர் கட்டண சரிசெய்தலானது சில முறைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. அதனுடன் காலந்தாழ்த்திய சரிசெய்தலானது திடீர் அதிகரிப்புக்களை ஏற்படுத்துவதுடன் அது வாடிக்கையாளர்கள் மீது சுமத்தப்பட்டுவிடும். குடிநீர் விநியோகம் செய்கின்ற அரச நிறுவனங்களானது நிதி ரீதியாக உடைந்து போகவில்லை. நிதி மேலாண்மை தொடர்பான முக்கிய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் நல்லதொரு விடயமாக அமைவதுடன் வளங்கள் சுரண்டப்படுவதனை தடுக்கலாம். இந்த சிக்கலை தடுக்கும் வகையில் அரசாங்கமானது நிதி அமைச்சுடன் இணைந்து கட்டண சீர் செய்தல் நடைமுறையினை மேற்கொள்வது தொடர்பாக அணுகுமுறையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படவேண்டிய நீர் வழங்கல் சேவையின் அளவை ( நுணுக்கமானது) மதிப்பாய்வு செய்வதற்கு கிடைக்கக்கூடிய நிதியை கருத்திற் கொண்டு குடிநீர் விநியோகத்திற்கான உகலாவிய அணுகல் இலக்கை அடைய முன்கூட்டியே பரிசீலிக்க வேண்டி இருக்கும். முன்னரே திட்டமிட்டதற்கமைய பெரும்பாலான மக்களுக்கு உற்பத்திசெய்யப்பட்ட குழாய் நீர் விநியோகத்தின் விரிவான வளர்ச்சியை நாடு சந்திக்க முடியாமல் போகலாம். சிலவற்றிற்கு உற்பத்திசெய்யப்பட்ட குழாய் நீர் விநியோகத்தை தேர்ந்தெடுத்து வழங்குவதற்கான மாற்றம் மற்றும் சிலவற்றிற்கு பாதுகாக்கப்பட்ட கிணறுகள்,மழைநீர் சேகரிப்பு விநியோகம் போன்றன மிதமான மற்றும்

ஏற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளுக்கு மதிப்பீடு தேவைப்படலாம். பாதுபாக்கப்பட்ட கிணறுகள் போன்ற பாதுபாப்பான முறையில் நிர்வகிக்கப்படும் நீர் விநியோகத்திற்கான செலவுகள் ,குறிப்பாக குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் உற்பத்திசெய்யப்பட்ட குழாய் நீர் வழங்கல் சேவைகளுக்கு ஏற்றதாக இல்லை. அவர்களுக்கு வகை வடிவமைப்புக்கள் மற்றும் சில தொழிநுட்க உதவிகள் வழங்கப்படலாம்.

நீரிழிவு நோயுடன் தொடர்பில்லாத நாள்பட்ட சிறு நீரக நோயின் (CKDU) நிகழ்வுகள் மற்றும் சில பகுதிகளில் நிலத்தடி நீரின் நுகர்வு காரணமாக சமீப காலங்களில் இது ஒரு விதிவிலக்கான பேரழிவுப்பிரச்சினையாக உள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீரை குழாய் மூலமாகவோ அல்லது பௌசர்கள் மூலமாகவோ விநியோகிப்பதற்கு மாற்றாக பிரச்சினை அதிகமாக இருக்கும் இடங்கள் போன்ற சிறிய குடியிருப்புகளுக்கு மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும். மழைநீர் சேகரிப்பு ஒரு சாத்தியமான விருப்பத்தினை வழங்கும் ஆனால் மூலோபாய ரீதியாக தண்ணீரை அறுவடை செய்வதற்கான அமைப்புக்களின் வளர்ச்சி தேவைப்படுகின்றுது மற்றும் வலுவான அரச நிறுவன ரீதியான உதவி தேவையாகவுள்ளது. இது இல்லாததால் குடும்பங்கள் மிகவும் அதிநவீன ஆற்றல் சார்ந்த நீர் சுத்திகரிப்பு உபகரணங்களை ஏற்றுக்கொண்டன. அந்த விருப்பத்திலிருந்து விலகிச்செல்ல உதவும் மாற்று ஏற்பாடுகள் கருத்தில் கொள்ளத்தக்கது.

வளர்ந்து வரும் தண்ணீருக்கான தேவை ,பாதுகாப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டடில் அதிக கவனம் செலுத்தப்படும். அவை பெரும்பாலும் மக்களை மையமாகக்கொண்ட செயல்களாகும், அவை அரசாங்கத்தினால் ஆதரிக்கப்படும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களினால் நன்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்சிகள் அவசியமாகின்றன. நிலத்தடி நீர் நுகர்வு மற்றும் நிலத்தடி நீர் மாசுபாடு என்பன நிகழ்வதே அதற்கு சாட்சிகளாகும். இவை இரண்டிற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட கண்காணிப்பு அவசியமாகும்.

மழைநீர் சேகரிப்பு தற்போது பெரும்பாலும் வீட்டுத்தேவைகளுக்காக “ கூரை மேல்” அறுவடை செய்யப்படுகின்றது. நிலத்தடிநீரினை மீள்நிரப்பும் உத்தியொன்று அவசியமாகின்றது. மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடிநீரினை மீள்நிரப்பும் தொழிநுட்பம் ,ஆலோசணைகள் வழங்கல் என்பன அரசினது தலையாய பொறுப்பாகும்.

பாடசலைகளில் வளரும் குழந்தைகளால் பயன்படுத்தப்படுகின்ற குடிநீர் சேவைகளை மீதான அக்கறை மற்றும் பராமரிப்பு என்பன அரசினால் மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய விடயங்களாகும்.

பல்வேறு நிலைகளில் செயற்படும் பல முகவர்கள் ( அரச மற்றும் பிற) குடிநீரை வழங்குதல், பயனுள்ள ஒருங்கிணைப்பு மற்றம் ஒத்துழைப்ப ஆகிய பல்வேறு அம்சங்களுக்க பொறுப்பாக இருப்பதனால் அரசானது இவற்றையும் கீழ்வருவனவற்றையும் கண்காணிப்பது அவசியமாகின்றது.

- அனைவருககுமான குடிநீரினது அளவு மற்றும் தரம்
- எவரும் வெளியடங்கிவிடாதவாறாக
- நீர் வழங்கல் முறை சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுதல்

அமைச்சினது தலைமையில் நன்கு தயாரிக்கப்பட்ட மற்றும் சரியான நேரத்தில் ஒருக்கிணைப்புக் கூட்டங்களை நடாத்துதல் இந்த முயற்சிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

## II. தேவை

உலகலாவிய குடிநீருக்கான அணுகல் இலக்கை அடைய ஒருங்கிணைந்த மற்றும் கூட்டு நடவடிக்கையை தொடங்குவதற்கு சட்டபூர்வமான மற்றும் அதிகாரம் நிறைந்த ஒரு நிறுவன ஆதரவை வழங்குவதற்கு தேசியக் கொள்கையொன்று தேவைப்படுகின்றது.

## III. நோக்கம் மற்றும் உள்ளடக்கம்

சிறந்த ஆரோக்கியம், சமூக –பொருளாதார மேம்பாடு போன்றவற்றிற்கு போதுமான தகுந்த குடிநீரினை பெறுவதற்கான வசதி அத்தியவசியமானதாகும். நீரினது பாதுகாப்பினை உறுதிசெய்வது முக்கியமானதாகும். அதிகரித்து வருகின்ற காலநிலை மாற்றங்களினால் நீர் ஆதாரங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் சவால்கள் தொடர்பாக மக்கள்,முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் அவசியமாகும். பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் சவால்களை சமாளிக்க அனைத்து துறைசார் நிறுவனங்களினது முயற்சிகள் மற்றும் வளங்களை திரட்டுவது அவசியம்.

மக்கள்தொகை அதிகரிக்க குடிநீருக்கான தேவையானது அதிகரிக்கும் அதனுடன் பிற காரணிகளும் அதில் செல்வாக்குச் செலுத்தும். அத்தகைய தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கு தேவையான தயாரிப்புக்களைப்பின்பற்றி ,வழிகாட்டுதல் மற்றும் பிற அதிகாரத்தினை வழங்குவதற்காக குடிநீருக்கான தேசிய கொள்கையினை தயாரிக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

குடிநீருக்கான தேசிய கொள்கை பின்வரும் விடயங்களுக்கு உதவும்

- நீரின் மதிப்பு மற்றும் அனைவரின் பொறுப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை அனைத்து இடங்களிலும் ஏற்படுத்தல்
- பாதுகாப்பு மற்றும் மாசு குறைப்பு ஆகியவற்றின் தேவைக்கு அதிக கவனம் செலுத்துதல்
- காலநிலை மாற்றத்தினால் கிடைக்கும் நீர் ஆதாரங்களின் அளவு மற்றும் தரத்தில் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- கிடைக்கக்கூடிய நீர் ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதனை முன்னுரிமைப்படுத்த வழியேற்படுத்தல்
- தேவையான நிறுவன ஏற்பாடுகள் மற்றும் அது தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் ,
- ஒருக்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு போன்றவற்றை அதிகரித்தல்

இது சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் பலவிதமான தேவைகள் மற்றும் சிக்கல்களை முறையாகவும் பகுத்தறிவு ரீதியாகவும் சந்திக்க வழிகாட்டும். முன்னேற்றத்திற்கும் தேவையான உள்ளீடுகள் மற்றும் விளைவுகளை அடைவதற்கும் அவசியமான வலுவான பொறுப்புக்கூறல் மற்றும் ஒத்துழைப்பை கொண்டு வருவதற்கான ஒரு கருவியாக இந்தக் கொள்கை செயற்படும். எங்கே, எப்போது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தும்.

## IV. அடிப்படைக்கோட்பாடு

நிதி நம்பகத்தன்மையின் சூழலில் நிறுவன ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான விதி முறைகளால் ஆதரிக்கப்படும் நன்கு வரையறுக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பானது தேவையான வளங்களை திரட்டுவதற்கு முன்நிபந்தனைகளாகும்.

### 4. கொள்கைக்கோட்பாடுகள்

1. பாதுகாப்பான குடிநீரைப்பெறுவது அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்படும்.
2. பயனாளிகளுக்கு பொறுத்தமான பொறுப்புகள் இருக்கும் மற்றும் நிலையான பயன்பாட்டிற்கு பொறுப்பேற்கப்படுவார்கள்
3. நீரின் நிலையான மேலாண்மையை உறுதி செய்யும் நீர் உணர்வுள்ள சமுதாயத்தை இந்தக் கொள்கை திட்டமிடுகின்றது.
4. மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.
5. தண்ணீருக்கான மற்றைய போட்டித்தேவைகள் இருப்பினும் குடிநீர்த் தேவைக்கே அதிக முன்னுரிமையளிக்கப்படும்.
6. நீர் வழங்கல் சேவைகளின் திட்டமிடல் மற்றும் மேம்பாடு மக்களை மையமாகக் கொண்ட , பங்கேற்பு மற்றும் கோரிக்கைக்கு பதிலளிக்கும் அணுகுமுறைகளை பின்பற்றும், பாலினம் சாராமல் இளைஞர்களுக்கு பதிலளிக்கக்கூடியதாக இருக்கும். திட்டமிடல் வகை வடிவமைப்புகளின் மேம்பாடு ,இணைப்புகளுக்கான கொள்கை மற்றும் மதிப்பீட்டிற்கான நடைமுறை ஆகியவை அடங்கும்.
7. நீர்ப்பாதுகாப்புத்திட்டங்களை வடிவமைத்து செயற்படுத்துவதில் காலநிலைத்தழுவல் மற்றும் தணிப்பு ,இடர்களை எதிர்க்கும் திட்டங்கள் மற்றும் குறைகளை தீர்ப்பதற்கான செயன்முறை ஆகியவற்றிற்கான அம்சங்கள் மற்றும் பரிசீலனைகள் சேர்க்கப்படும்.
8. விதிவிலக்கான சூழ்நிலைகளைத்தவிர, சுத்திகதிக்கப்பட்ட குழாய் நீர் வழங்கல் அமைப்பிலிருந்து குடிநீரைப்பெறுவது அல்லது பாதுகாப்பாக நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்பான கிணறு ,நீரூற்று,நீர் வழங்கல் அல்லது மழைநீர் சேகரிப்பு அமைப்பு போன்றவற்றில் இருந்து நீரைப் பெறுவதே மக்கள் விருப்பமாக இருக்கும்.
9. திட்டமிடல்,தேவைகள்,கிடைக்கக்கூடிய நிதி மற்றும் மலிவு ஆகியவற்றிற்கு பதிலளிப்பதில் பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் நீர் வழங்கல் வகையை தேர்ந்தெடுப்பதில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். (சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீர் வழங்கல் ,பாதுகாக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகள், ஊற்று நீர் வழங்கல் மற்றும் மழைநீர் சேகரிப்பு விநியோகம் )
10. பிற்படுத்தப்பட்டவர்கள், நகர்ப்புற மற்றும் தொலைதூர கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த மக்கள் என அனைத்து தரப்பினரினதும் குடிநீர்த்தேவைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்படும்.
11. குடிநீர் விநியோக மேம்பாட்டிற்கான முதலீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் பொறிமுறையொன்றுக்குள் உள்ளடக்கப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் அமைப்புகளின் நிதி நம்பதத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் பொறுப்பான

நிறுவனத்தின் நிதி நிலைதன்மை ஆகியவற்றை கொண்டே முன்னெடுக்கப்படும்.

12. அனைத்து நீர் ஆதாரங்களின் பாதுகாவலராக உள்ள அரசு மக்கள் சார்பாக இத்தகைய வளங்களை திறம்பட மற்றும் திறமையான முறையில் நிர்வகிப்பதுடன் அதன் முதன்மை மதிப்புக்குரிய அங்கீகாரம் மற்றும் தற்போதைய எதிர்கால சந்ததியினரின் சமூக,பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு இயைபாக உள்ளவாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

13. அனைத்து நீர் ஆதாரங்களில் இருந்தும் ( மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர்) நீர் எடுப்பது சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பயனர்களைப்பாதிக்காமல் குறிப்பாக ஆறுகள் மற்றும் நீரோடைகளில் இருந்து உரிய அங்கீகாரத்தடன் பிரித்தெடுப்பதுடன் கடைநிலைப்பயனாளர்களுக்கும் பாராபட்சம் இல்லாதவாறு இவை முகாமைத்துவம் செய்யப்படும்.

14. பொருத்தமாக இடங்களில் செயற்கையான மீள்நிரப்பல் மற்றும் மழைநீர் சேகரிப்பு போன்றவற்றிற்கு அரசின் ஆதரவு வழங்கப்படும்.

15. தட்பவெப்ப நிலைத்தன்மை மற்றும் பேரிடர் அபாயத்தை தணித்தல் ஆகியவை நீர் வள முகாமைத்துவத்தில் உட்புகுத்தப்படுவதுடன் அதற்கு தேவையான நடவடிக்கைகளை இணைத்துக்கொள்ளுதல் ஒரு நிலையான நடைமுறையாக மாறும்.

16. ஐக்கிய நாடுகள் அமையத்தின் “ நிலையான அபிவிருத்தி இலக்ககள்” (SDG)- இலக்க 6.1 நிலைநிறுத்தப்படும்.

5. கொள்கை கூற்றுக்கள்

a. பாதுகாப்பான மற்றும் தரமான குடிநீருக்கான உலகளாவிய அணுகலை அடைவதற்கான தொலைநோக்கு மற்றும் கொள்கை முன்நிபந்தனைகளை உள்ளடக்குவதனை உறுதி செய்ய குடிநீருக்கான ஒரு விரிவான தேசிய பிரதான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
b. தற்போது போதிய குடிநீர் வசதி இல்லாத அனைத்து சமூகங்களையும் அடையாளங்கண்டு கொள்வதுடன் பிற்படுத்தப்பட்ட ,கிராமப்புற, நகர்ப்புற, தொலைதுர கிராமப்புற, தோட்டப்புற மற்றும் புலம்பெயர்ந்த மக்களுக்கு குறித்த வசதிகள் சென்றடைவது உறுதிப்படுத்தப்படும்.
c. சமூகங்களுக்கிடையிலான நீர் பற்றாக்குறையினை குறைக்குமுகமாக முதலீடுகளின் சமமான விநியோகத்தினை உறுதிப்படுத்தி சமூக,பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் கருத்தாய்வுகளின் அடிப்படையில் வளங்களைப் பகிர்தல்.
d. நிர்வாகத்திறனை கருத்திற் கொண்டு வழங்கப்பட்ட நீர் சேவையினது செயல்பாட்டுப் பொறுப்புக்கள் அனைத்து சமூகத்தினரையம் அடையும்படியாக பரவலாக்கப்படும்.
e. நீர் வளங்களினை பாதுகாத்தல் மற்றும் அவற்றை மாசுபடுவதிலிருந்து தடுப்பது , நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் ஆதாரங்களின் நிலைத்தன்மை ஆகியவை தேசிய நீர் பாதுகாப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்வதன் மூலமாகவும் திறமையான அரசு அதிகாரிகளின் தலையீடுகளின் மூலமும் குறித்த விடயங்கள் உறுதி செய்யப்படும்.

f. இந்த மதிப்பு மிக்க வளத்தின் முகாமையை மேம்படுத்துவதற்கான அனைத்து அம்சங்களுக்காகவும் குறிப்பிட்ட பொறுப்பை ஏற்று பொருத்தமான இடங்களில் செயற்கையான மீள்நிரப்பல் உட்பட மழைநீர் சேகரிப்புக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் அங்கீகாரம் வழங்கப்படும்.
g. குடிநீரினை தவறாகப்பயன்படுத்தல் கட்டுப்படுத்தப்படுவதுடன் முடிந்தவரை இடண்டாம் நிலை நோக்கங்களுக்காக நீரினை மீண்டும் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படும்.
h. குடிநீரினை விற்பனை செய்யும் போதும் சேமிக்கும் போதும் பொதுமக்களினது சுகாதாரப் பாதுகாப்புக் கருதி உரிய அதிகாரிகளின் ஒப்புல் அவசியமென்பதுடன் அதன் தரம் என்பன உறுதி செய்யப்படும்.
i. பாடசாலைகள் மற்றும் சமூகப்பராமரிப்பு நிறுவனங்களில் ( குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லங்கள்) நீர் வழங்கல் சேவைகளின் பராமரிப்பு மற்றும் அவற்றை திறம்பட நிர்வகிப்பதற்கான முறையொன்று அரசாங்கத்தினால் நிறுவப்படும்.
j. பொது இடங்களில் வழங்கப்படும் நீர் சேவைகளுக்கு முறையான பராமரிப்பு வழங்கப்படுவதில் முன்னுரிமையடிப்படையில் கவனம் செலுத்தப்படும்.
k. அனைவருக்கும் வழங்கப்படும் குடிநீரின் தரம் குறித்து சுதந்திரமாக கண்காணிப்பதற்கான ஒழுங்குமுறை மற்றும் ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும். நீர் தர கண்காணிப்புக் குழுவினை (WQCSC) செயற்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் குறிப்பிட்ட பொறுப்புக்கு தேவையான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு கொண்டிருக்கும்.
l. நீர்க்கட்டணங்களை செலுத்தக்கூடிய நிலையற்றவர்கள் சமூகப்பாதுகாப்பு அமைப்பின் கீழ் தங்களது மானியங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக பரசீலிக்கப்படும்.
m. குடிநீர் வழங்குவதற்கு பொறுப்பான முகவர்களுக்கிடையே திறமையான, பயனுள்ள மற்றும் ஒருங்கிணைப்புக்குத்தேவையான வழிமுறைகள் அனைத்து மாவட்டங்களிலும் உரிய வேகத்துடன் நிறுவப்படும்.
n. அனைவருக்கம் குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக பொறுப்பான அமைச்சானது உரிய பங்குதாரர்களுடன் சிறந்த முறையில் தயார் செய்யப்பட்ட கூட்டங்களை ஒரு வழக்கமான அடிப்படையில் நடாத்துதல்.

6. கொள்கை இலக்குகள்

a. பாதுகாப்பான குடிநீரை பெற்றுக்கொள்வதனை ஒரு மனித உரிமையாகக்கருதி செயற்படுவதுடன் ஐக்கிய நாடுகள் அமையத்தின் UN SDG (Target 6.1) இனை இதில் இயைபாக்கவதுடன் பருகக்கூடிய நீரின் ஏனைய தேவைகளையும் பெற்றுக்கொள்ளல்.
b. வசதியற்ற நகர்ப்புற , தொலைதுர கிராமப்புற மற்றும் புலம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படகின்ற குடிநீர் சேவைகளில் உள்ள வேறுபாட்டினை இல்லாது செய்தல்
c. மேற்கூறிவற்றிற்கிணங்க தொடர்புடைய நிறுவனங்களை அணிதிரட்டவும் அதிகாரமளிக்கவும் பொருத்தமான மற்றும் செயற்படுத்தும் கொள்கை கட்டமைப்பை உருவாக்குதல்

7. பொருந்தக்கூடிய தன்மை மற்றும் நோக்கம்

இக்கொள்கையானது பின்வருவனவற்றிற்கு உரித்தாக்கப்படும்

a. குடிநீரைப் பெறுபவர்கள் அவர்களின் கடமைகள், பொறுப்புக்கள் போன்றவற்றை நிறைவேற்றுதற்கு.
b. நீர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் அதன் ஒதுக்கீடுகளுக்கு பொறுப்பானவர்களுக்கு
c. நீர்ப் பாதுகாப்பு கொள்கையின் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கு பொறுப்பானவர்களுக்கு
d. நகர மற்றும் கிரமப்புற மக்களுக்கு பருகத்தகு நீரினை வழக்குவதற்காக திட்டமிடல்,அபிவிருத்தி, இயக்கம் மற்றும் தொழிற்பாடு ஆகியவற்றில் பங்கெடுக்கும் அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும்.
e. அனைவருக்கும் வழங்கப்படும் நீரின் தரத்தினை கண்காணிப்பவர்கள்
f. நகர்ப்புற,கிராமப்புற மற்றும் தொலைதூர இடங்களில் குடிநீர் விநியோகத்தினை பெறாதவர்கள்

நோக்கமானது பின்வருவனவற்றை உள்ளடக்கும்

g. தீவில் நிலையான குடிநீர் தேவைப்படுவோர் குறிப்பாக கிரமமப்புற மற்றும் தொலைதூர சூழ்நிலைகளில் காணப்படும் மக்களை அடையாளம் காணுதல்
h. ஆராய்ச்சி, திட்டமிடல், மேம்பாடு மற்றும் அபிவிருத்தி போன்ற நீர் விநியோக வேவையின் அனைத்து அம்சங்களுக்கும் நிதியினை பெறுதல்
i. நீர் வழங்கல் அமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் பராமரிப்பிற்காக நிறுவப்பட்ட நிறுவனங்களின் தொழிற்பாடுகளை முன்னெடுத்தல்
j. தேவைப்படும் இடங்களைப் பொறுத்து ஏற்கனவே உள்ள அமைப்புக்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்தல்
k. பேரிடர் மற்றும் இடர் முகாமைத்துவ ஏற்பாடுகள்
l. நீர் வழங்கலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களை பொறுப்புக்கூற வழியேற்படுத்தல்
m. செயற்பாட்டில் உள்ள அனைத்து நீர் வழங்கல் அமைப்புக்களாலும் வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை கண்காணித்தல் மற்றும் அறிக்கை செய்தல்
n. ஐக்கிய நாடுகள் அமையத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட SDG களின் கீழ் நாட்டினால் செய்யப்பட்ட உறுதி மொழிகளுக்கிணங்க அது தொடர்கான அறிக்கை செய்தல்
o. பொருத்தமான இடங்களில் பொது மற்றும் தனியார் கூட்டான்மை ( PPP) உதவியுடன் நீர் வழங்கல் சேவையினை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

8. கொள்கை அமுலாக்கம்

I. உத்திகள்

ஆரம்பத்தில் குடிநீர் விநியோகம் தொடர்பான கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமைச்சு குடிநீருக்கான தேசியக் கொள்கையினை நிறுவுவதற்கு அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும். கொள்கை இலக்குகள் ,

துணைக்கோட்பாடுகள் மற்றும் கொள்கையின் பின்னால் உள்ள நோக்கம் மற்றும் விடயப்பரப்பு ஆகியவை கவனம் செலுத்துப்படும்.

கொள்கையின் நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கான தேவைகளை (நிறுவன மற்றும் பிற) மதிப்பீட்டின் பேரில் அமைச்சு தேவையான வழிமறைகளை முன்னெடுப்பதுடன் குறித்த விடயங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நிதி மூலங்களையும் மனித வளங்களையும் திட்டமிட்ட அடிப்படையில் திரட்ட வேண்டிய தேவை உள்ளது.

பல்வேறுபட்ட தேவைகளைப் பொறுத்து நீர் வழங்கல் சேவையில் பங்கு பெறுகின்ற அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையே பயனுள்ள தகவல் தொடர்பு , ஒருங்கிணைப்பு மற்றம் ஒத்துழைப்பினை உறுதிசெய்வதற்காக பரந்த கலந்துரயாடல்கள் மூலமாக வழிமுறைகள் உருவாக்கப்படும். அனைவருக்கும் குடிநீர் வழங்கல் சேவைகளின் சிறந்த மேம்பாடு,பராமரிப்பு மற்றும் நல்ல பொதுப்பயன்பாட்டு நடைமுறைக்கேற்ப தேவையான ஒருங்கிணைப்புகள் போன்றவற்றை அதிகரிக்க அவை போதுமானதாக இருக்கவேண்டும்.

கொள்கை கோட்பாடுகள் மற்றும் இலக்குகளை அடையுமுகமாக தகுந்த சூழல் மற்றும் அதிகாரத்தினை அரசாங்கமானது ஏற்படுத்தித் தரும். அரசாங்கமானது தேவையான வளங்களை திரட்டி வழிநடத்தும். குறித்த கொள்கைகளுடன் இணங்கி ஒழுகுதல் தொடர்பான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அமைச்சு கண்காணிக்கும்.

II. பொறுப்பு மற்றும் அதிகாரம்

குடிநீரை வழங்குதல் உள்ளிட்ட பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கான முதன்மைப் பொறுப்பு உள்ளூராட்சி அமைச்சிடம் உள்ளது. தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அமைச்சு அதன் கீழ் இயங்கும் மாகாண சபைகள், மாநார சபைகள் மற்றும் நகர சபைகள் போன்றவற்றை சார்ந்துள்ளது. சபைகள் அந்தந்த சட்ட திட்டங்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

( குறிப்பு , இந்த கட்டளைச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட அல்லது வேறு எந்த அதிகாரத்துக்குள் வருகின்ற , நகரத்தின் நிர்வாக வரம்புகளுக்குள் ( சபைகள்) அனைத்து விடயங்களின் ஒழுங்குமுறை , கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்திற்கு பொறுப்பாகும் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும், பொதுப்பாதைகள், மக்களின வசதி , நலன் மற்றும் நகரத்தின் வசதிகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையது )

உள்ளூராட்சி அமைச்சு பல்வேறு சூழ்நிலைகளில் குடிநீர் வழங்கல் மற்றும் சுபாதார சேவைகளை மேம்படுத்துவது தொடர்பான கொள்கை மற்றும் ஒருங்கிணைப்பு விடயங்களை மத்திய அமைச்சுக்கு மாற்றியுள்ளது. ( 22.11.2010 ஆம் திகதிய 1681/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும் )

i. உள்ளூராட்சி அதிகாரசபைகள்

அவர்களின் தொகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார சேவைகள் உள்ளிட்ட பயன்பாட்டு சேவைகளை வழங்குவது அவர்களது பொறுப்பாகும். குடிநீருக்கான தேசிய கொள்கையினது உட்கிடக்கைகளால் அவர்கள் வழிநடத்தப்படுவதுடன் சிறந்த நிர்வாக, நிதி,தொழிநுட்ப மற்றும் பொதுப்பயன்பாட்டு

நடைமுறைகளுக்கு ஏற்ப நீர் வழங்கல் சேவையினை இயக்கிப் பராமரிக்க வேண்டும். தேவையொன்று ஏற்படும் பொழுது NWSDB இனது அல்லது DNCWS இனது தொழிநுடப உதவியினை கோரலாம்.

ii. மகாண சபைகள்

13ஆம் திருத்தச்சட்டத்திற்கமைவாக, மாகாண சபைகளுக்கு தங்களது ஆடபுல எல்லைக்குள் பருகத்தரு குடிநீர் வழங்கல் உட்பட நடைபெறுகின்ற அனைத்து விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமுள்ளது.

iii. குடிநீர் மற்றும் பொதுச்சுகாதாரத்திற்கு பொறுப்பான அமைச்சு

குடிநீர்,சுகாதாரக்கொள்கை மற்றும் ஒருங்கிணைப்புக்கு பொறுப்பான அமைச்சு அதற்கு குறித்தொதுக்கப்பட்ட மேற்கூறிய விடயங்களை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.அதன் கீழ் இயங்குகின்ற NWSDB மற்றும் DNCWS போன்றவற்றின் ஊடாக குடிநீர் வழங்குவது தொடர்பான அதன் பொறுப்புக்களை கண்காணிக்கின்றது.

பின்வரும் பொறுப்புக்களை அது உள்ளடக்கும்:

a) மனித தேவையாகவும் உரிமையாகவும் அனைவருக்கும் குடிநீர் கிடைப்பதனை உறுதிசெய்தல்.
b) பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை உறுதிசெய்வதற்காாக தேசிய , மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் தனது வளர்ச்சிப் பங்கு நிறுவனங்கள் மற்றும் முகவர்களை வழிகாட்டும் விதமாக சட்டங்களை உருவாக்குதல்.
c) அனைத்துப் பங்குதாரர்களிடையேயான செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிறுவன ஒத்துழைப்பிற்கான ஒரு தளத்தை வழங்குதல்.
d) NWSDB மற்றும் DNCWS களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
e) வளங்களை திறமையான விதத்தில் முகாமை செய்தலுடன் சமத்துவம்,வெளிப்படைத்தன்மை எனபனவற்றைக் கொண்டிருப்பதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றுதல்.
f) தேவையான அனைத்து வளங்களையும் திரட்டுதல் ( மனித வளம் மற்றும் நதி)
g) குடிநீருக்கான தேசியக் கொள்கையில் வரையறுக்கப்பட்ட நோக்கங்களில் செயல்திறனை கண்காணித்தல் மற்றும் பொருத்தமான குறிகாட்டிகளைப் பின்பற்றுதல்.
h) தேசிய நீர்ப்பாதுகாப்பு பொள்கையை நடைமுறைப்படத்துவதில் சுகாதார அமைச்சுக்கு ஆதரவளித்தல். அனைவருக்கும் வழங்கப்படும் குடிநீரின் தரத்ததை கண்காணிப்பதிலும் WQSC உடன் இணைந்து பணியாற்றுதல்
i) ஐக்கிய நாடுகள் சபையின் SDG 6 ( இலக்குகள் 6.1 தொடங்கி 6.6 வரை) இலக்குகளை பங்குதாரர்களினது உதவியுடன் அடைய முயற்சித்தல்

j) சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை பின்பற்றி துறையின் செயல்திறனை தேசிய மற்றும் சர்வதேச அளவில் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை எளிதாக்குவதற்கு தரவு மற்றும் தகவல்களை வழங்குதல்.
k) குடிநீரின் தரம் மற்றும் நீர் வழங்கல் சேவைகள் தொடர்பான தரவுத்தளத்தினை கொண்டு நடாத்தல்.

iv. தேசிய நீர் வழங்கல் மற்றம் வடிகாலமைப்புச்சபை

தேசிய நீர் வழங்கல் மற்றம் வடிகாலமைப்புச்சபையானது (NWSDB) 1975 இல் நிறுவப்பட்டது. (1974 ஆம் ஆண்டின் NWSDB சட்டம் இல 02 )குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சின் கீழ் இது இயங்கிவருவதுடன். குறித்த நிறுவனமானது தேவையான தொழிநுட்ப நிபுணத்துவம் மற்றும் முகாமைத்துவ திறன் என்பனவற்ழறக் கொண்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றம் வடிகாலமைப்புச்சபையானது (NWSDB) குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிபளின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான அமைச்சினது முதன்மையான பிரிவாகும்.

குடிநீருக்கான தேசியக் கொள்கையின் கீழ் ந்ருளுனுடீ அனது பின்வரும் பொறுப்புக்கள் கொண்டிருக்கின்றன.

a) அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முன்னுரிமைகளுக்கமைய குடிநீர் விநியோகத்தினை அபிவிருத்திசெய்தல்.
b) அமைச்சினால் பணிக்கப்பட்டவாறாக அடையாளம் காணப்பட்ட கிராமப்புற சமூகங்களுக்கான குடிநீர் விநியோக அமைப்புக்களின் திட்டமிடல் மற்றும் மேம்பாடு என்பனவற்றுடன் CBO களின செயற்பாடுகளை நிர்வகித்தல்.
c) தேவைப்படும் இடங்களில் இருக்கும் சேவைகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல்.
d) பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் விநியோக வசதிகளை எளிதாக்குவதற்கு சம்மந்தப்பட்ட அமைச்சுக்களின் வழிகாட்டதலின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புற மற்றும் அரை நார்ப்புற நீர் வழங்கல அமைப்புக்களை கையகப்படுத்தல்.
e) DNCWS உடனான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு
f) அதன் செயல்பாடுகளின் நிலைத்தன்மையை பராமரித்தல், நிதி ரீதியாக வலுவான பிராந்திய ஆதரவு மையங்களில் இருந்து மானியங்கள் பெற்று பொருத்தமான இடங்களில் குறைந்த வருமானம் கொண்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு குறித்த மானியங்களை வழங்குதல்.
g) வறட்சி,வெள்ளம் மற்றும் சுகாதாரம் தொடர்பான தொற்று நோய்களால் ஏற்படும் சூழ்நிலைகளுக்கு பதிலளிப்பது.
h) கோரிக்கைகள் எழுமாயின் நீர் வழங்குனர்களுக்கு தொழிநுட்ப உதவியினை வழங்குதல்.

i) கிராமப்புற பிராந்தியங்களில் காணப்படும் நீர்த்துறையினருக்கு தொழிநுட்ப உதவியினை வழங்குதல்.

v. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்.

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களமானது (DNCWS) 2014 ஆம் ஆண்டு NWSDB உடன் இணைந்து கிராமப்புற நீர் வழங்கல் துறையயை பாதிக்கும் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக நிறுவப்பட்டது.இது NWSDB இருக்கும் அதே அமைச்சின் கீழ் உள்ள போதும் NWSDB போன்று தொழிநுட்ப நிபுணத்துவத்தை இது கொண்டிருக்கவில்லை. ஆயினும் இது கிராமமப்புறங்களில் காணப்படுகின்ற குடிநீர் பிரச்சினைகள் தொடர்பான அறிவைக் கொண்டுள்ளது. தற்போது பல சமூக நிறுவனங்களால் இயக்கப்படும் கிராமப்புற நீர் விநியோக சேவைகளின் இருப்பினை தக்கவைத்திருப்பதே இதன் பணியாகும்.

குடிநீருக்கான தேசிய பொள்கையின் கீழ் DNCWS ஆனது கிராமமப்புற மற்றும் தொலை துரப்பகுதிகளில் குடிநீர் விநியோக சேவைகள் தேவைப்படகின்ற சமூகங்களை கண்டறியும். இது NWSDB இல் தங்கியுள்ளது அதற்கான காரணம் NWSDB யே இதனது திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் பிற சேவைகளில் ஆலோசணை வழங்குபவராக காணப்படுதல் ஆகும். ஒரு CBO வினை தயார்படுத்துவதன் மூலமாக அதன் செயலபாட்டினை நிர்வகிக்க வழியேற்படுத்தலாம்.

குடிநீருக்கான தேசிய பொள்கையின் கீழ் DNCWS மற்றும் NWSDB இடையே மேற்கூறப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளை வரையறுப்பது இரு முகவர்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பினை வலுப்படுத்த உதவும்.

vi சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs)

அமைச்சினது பணிப்புரைகளுக்கமைய கிராமப்புற சமூகங்களில் குடிநீர் விநியோக அமைப்புக்களின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றை முன்னெடுக்க இச் சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs) அமைக்கப்பட்டுள்ளன.

vii PHDT

தோட்ட மனித அறக்கட்டளை என்பது (PHDT) ஒரு முத்தரப்பு அமைப்பாகும். மேலும் இது சமூக நலத்திட்டங்களின் மூலம் பெருந்தோட்ட சமூகத்தின் நலத்திட்டங்களின் மூலம் பெருந்தோட்ட சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு வசதியாக 1992 ஆம் ஆண்டு புரட்டாதி 18 ஆம் திகதி நிறுவப்பட்டு அமைச்சுடன் இணைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம், பிராந்திய தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்டத்துறையில் உள்ள சில முக்கிய தொழிற்சங்கங்கள் ஆகிய மூன்று தரப்பினரும் இதில் ஈடுபட்டுள்ளனர்.இதில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, நிதி அமைச்சு, பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுக்கள் போன்றன அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கு PHDT பிரதான சேவை வழங்குனராக உள்ளதுடன் நிலையான திட்டங்கள் மற்றும் திட்டங்களில் முதலீடு எனடபன PHDT யினாலேயே முன்னெடுக்கப்படுகின்றது.

viii தனியார் துறை

குடிநீர் வழங்கல் அமைப்புக்களை மேலும் மேம்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபையின் SDG இன் கீழ் உகலாவிய பாதுகாப்பிற்கான இலக்ககை அடைவதற்கு உதவவும் தனியார் துறையின் நேரடி முதலீடுகள் மூலமாகவும் பாரம்பரிய நிதி ஆதாரங்களான அபிவிருத்தி வங்கிகளினது நிதியினை பெற்றுக்பொள்வதற்கும் இத்தனியார் துறையானது உதவுகின்றது.பொது மற்றும் தனியார் கூட்டான்மையுடாக (PPP) நிதியளிக்கப்படுவதனை கருத்திற் கொள்வதன் மூலம் பெரும் வளர்ச்சிக்கு பங்காற்றலாம்.

ix தேசிய நீர் வளங்கள் கவுன்சில்

நீர் வள அபிவிருத்தி தொடர்பான மூலோபாய முடிவெடுப்பதில் தேசிய அளவிலான ஒழுங்குமுறைப்பொறிமுறையினை செயல்படுத்த நீர் வள கொள்கையின்படி ஒரு தேசிய நீர் வள கவுன்சில் நிறுவப்பட முன்மொழியப்பட்டது. தேசிய நீர் வளங்கள் கவுன்சிலானது பிரதம அமைச்சரினது அலுவலகத்தின் கீழ் இயங்கும். நீர் வளங்களின் நிலை தன்மையை உறுதிசெய்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச நடைமறைகளின் அடிப்படையில் நீர்வள மேலாண்மை உத்திகள் குறித்த காலமுறை மதிப்பாய்வுகளை இச்சபையானது மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

x தேசிய நீர் வளங்கள் செயலகம்

தேசிய நீர் வளச் செயலகமானது (NWRS) போதுமான சட்ட,நிர்வாக அதிகாரங்கள் மற்றும் நீர்த்துறையில் அடையாளம் காணப்பட்ட அதன் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஒழுங்குமுறை உத்தரவுகளுடன் நிறுவப்படும். NWRS அதன் செயற்பாடுகளை NWRS இன் நேரடி வழிகாட்டுதல்களின் கீழ் தேசிய மற்றும் மாகாண அளவிலான நீர்த்துறை நிறுவனங்கள் மற்றும் நீர் பாயானாளிகள் சமூகத்தினருடன் உகந்த ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளும்.

.

xi நீர் வளங்கள் சபை

நீர் வளங்கல் சபையானது (WRB) 1964 இல் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது நிலத்தடி நீர் வள மேலாண்மையில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக அனைத்து நிலத்தடி நீரை உறிஞ்சும் நடவடிக்கைகளுக்கும் நீர் வள சபையின் அனுமதி தேவை. தற்பொழுது நீர் வழங்கல் அமைச்சின் கீழ் உள்ளது மேலும் இது நிறுவப்பட்டபின்பு தேசிய நீர் வளங்கள் கவுன்சிலுக்கு மாற்றப்படலாம்.

(xii) சுகாதார அமைச்சு

சுகாதார அமைச்சானது மனித ஆரோக்கியத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளுக்கு இணங்க அத்தகைய அனைத்து சேவைகளாலும் வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு மற்றும் தரத்தினை சுயாதீனமாக கண்காணிப்பதற்கான கட்டுப்பாட்டாளராக இருக்கும்.

தர உத்தரவாத நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சின் மேற்பார்வை தேவைகள் மற்றும் அதிகாரங்களை வலுப்படுத்த சமர்ப்பிக்கப்பட்ட இணைந்த அமைச்சவைப்பத்திரமானது புரட்டாதி 2009 இல் அங்கீகரிக்கப்பட்டது. WQSC இன் தலைமையகமாக சுகாதார அமைச்சு தொடர்சிசியான மற்றும் விழிப்புடன் பொது சுகாதார மதிப்பீடு மற்றும் குடிநீர் விநியோகத்தினை மறுபரிசீலணை செய்வதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையை உறுதி செய்வதற்கும் சுகாதார அபாயங்களை தவிர்ப்பதற்கும் சுயாதீன கண்காணிப்பு நிறுவனமாக செயல்படும்.

(xiii) மத்திய சுற்றாடல் அதிகாரசபை

சமூகங்களுக்கு நிரையான நீர் கிடைப்பதனை உறுதிசெய்வதற்காக நீர் நிலைகள் மற்றும் நீர் ஆதாரங்களினது இருப்பினை தக்கவைத்துக்கொள்வதற்கான முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தும். நீர் வழங்கல் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு போன்றவற்றுடன் நெருக்கமான தொடர்பினை பேணும்.

(xiv) அபிவிருத்தி பங்காளர்கள்

பலதரப்பு அபிவிருத்தி வங்கிகள், இரு தரப்பு உதவி முகவர் நிலையங்கள், ஏற்றுமதி வங்கிகள்,ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவை இலங்கையில் பாதுகாப்பான மற்றும் தரமான குடிநீரை அபிவிருத்தி செய்வதில் உறுதுணையாக இருக்கின்றன.

நீர் வழங்கல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கு நிதியினை வழங்குவதோடு அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை முன்னெடுப்பதில் துணைநிற்கின்றன.

(xv) பயனாளிகள்

தடையில்லா சேவைகளை உறுதி செய்வதில் பயனாளிகளுக்கு பொறுப்பும் அர்ப்பணிப்பும் இருத்தல் வேண்டும். பயனாளிகளின் தண்ணீரின் விலை, நீர் ஆதாரங்களின் வரம்பு,பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து அறிந்திருக்க வேண்டும்.

- ஒரு திட்டத்தின் திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தின் போது ஊக்கமாக பங்கெடுத்தல்
- சேவையின் நம்பகத்தன்மை மற்றும் தரத்தினை உறுதிசெய்வதில் அவர்களின் பொறுப்புக்களை சந்திக்க சேவை வழங்குனருடன் ஒத்துழைத்தல்.
- பொறுப்பற்ற நபர்களினால் மதிப்பு மிக்க சேவையை துஷ்பிரயோகம் செய்வதனை தடுக்க விழிப்புடன் இருத்தல்.
- விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சாரங்களில் சேவை வழங்குனருடன் ஊக்கமாகப் பங்கேற்றல்.
- நீர் பாதுகாப்பினை உறுதி செய்வதிலும் தேசிய நீர் பாதுகாப்புக் கொள்கையினை செயற்படத்துவதிலும் ஊக்கமாயிருத்தல்.
- நீர் வளங்களை பாதுகாப்பதில், பராமரிப்பதில் ஊக்கமுடன் செயற்படல்.
- சமூக அடிப்படையிலான நிறுவனங்களின் ஊடீழு களை உருவாக்கி அவற்றின் மூலம் சமூக நீர் வழங்கல் அமைப்புக்களை திட்டமிடவும் செயற்படுத்வும் உறுதுணையாய் இருத்தல்.
- வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரினை முறையாக பயன்படுத்துவதன் மூலம் செலவீனங்களை கட்டுப்படுத்துவதுடன் குறித்த அமைப்பின் நீண்டகால பாவனையையும் உறுதிசெய்தல்.

அரும்பதங்கள்

இணைப்பு: இது தொடர்பான கொள்கைகள்

1. தேசிய நீர் வளங்கள் கொள்கை (2023)
2. நீர் வளங்கள் கொள்கை சட்டம்
3. தேசிய சுற்றுச்சூழல் சட்டம்
4. தேசிய மழைநீர் கொள்கை மற்றும் உத்திகள் (2005)
5. தேசிய நீர் பாதுகாப்புக் கொள்ளை